(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 3(9).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 ஒக்டோபர் 23 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 நவெம்பர் 07, வியாழக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

தேசிய புத்தாக்க முகவராண்மைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஈடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொட்டுஅத்தாவல சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்ரவரி 23 ஆம் திகதிய 2007/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் கொடிகஹாகந்த சரணாலயம் தொடர்பில் வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 ஒக்டோபர் 03 ஆம் திகதிய 2039/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்,— தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— (469 ஆம் அத்தியாயமான) தாவர, வனவிலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவின் கீழ் காயன்கேணி கடலோர சரணாலயம் தொடர்பில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2118/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(தஇ) மற்றும் 61(1)(தஈ) பிரிவின் கீழ் இலங்கை நீர்ப்பரப்பினுள் மீன் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்களை பேணிக்காத்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈட்டிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச் 03 ஆம் திகதிய 2008/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் பிரிவு 29 மற்றும் பிரிவு 61(1)(ப) என்பனவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் தம்புவா மீன் இனங்களைப் பிடிப்பதைத் தடைசெய்தல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2014/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 4),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ப) பிரிவின் கீழ் மீன் மற்றும் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி இறக்குமதி மற்றும் மீள் ஏற்றுமதி முகாமைத்துவம் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 15 ஆம் திகதிய 2023/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 5),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ஐ) மற்றும் 61(1)(ந) பிரிவின் கீழ் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தலையிடுவதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகளை அமுலாக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 6),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் மீன்கள் தரையிறக்கல் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமானவரால் ஆக்கப்பட்டு, 2017 யூலை 13 ஆம் திகதிய 2027/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 7),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 64(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61(1)(ஆ) பிரிவின் கீழ் மாதல் மீன்பிடி (கரைவலை) தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஏப்றல் 05 ஆம் திகதிய 2065/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 8),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61(1)(ந) பிரிவின் கீழ் வெளிநாட்டுக் கொடி ஏற்றப்பட்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கான ஆகக்குறைந்த நியமங்கள் தொடர்பில் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 25 ஆம் திகதிய 2107/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 9),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீரியல் வளங்கள் சட்டத்தின் 6, 7, 8, 9 மற்றும் 10 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 பிரிவின் கீழ் மீன்பிடித் தொழிற்பாடு தொடர்பில் கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 18 ஆம் திகதிய 2115/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/85 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ் தேசிய விளையாட்டுச் சங்கங்கள் தொடர்பில் தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 2137/86 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 செப்டெம்பர் 26 ஆம் திகதிய 2142/69 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.10.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2019 நவம்பர் 19, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

34/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை விகிதமானது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொழிலின்மை பிரச்சினைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகளின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

110/ '18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை சட்டவிரோத போதைவஸ்து சுற்றிவளைப்புக்கு அரசாங்கம் செலவிட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட ரீதியாக யாது என்பதையும்;

(ii) மேற்படி தொகை செலவிடப்பட்ட முறை யாது என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை சட்டவிரோத போதைவஸ்து குற்றச்செயல்கள் தொடர்பில் அரசாங்கம் அறவிட்டுக் கொண்டுள்ள வருடாந்த தண்டப் பணம் யாது என்பதையும்;

(iv) கூடுதல் தண்டப் பணம் அறவிட்டுக் கொள்ளப்பட்ட போதைவஸ்து வகை யாது என்பதையும்;

(v) போதைவஸ்து ஒழிப்புக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

164/ ' 1 8

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஊவா மாகணத்தில் உயர்தரப் பரீட்சையில் உயர் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாணவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஊவா மாகாண சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், புலமைப் பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மற்றும் அந்த புலமைப் பரிசில்களின் நிதிசார் பெறுமதி ஆகிய தகவல்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

545/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 70 வயதுக்கு மேற்பட்ட பிரசைகளுக்கு செலுத்தப்படுகின்ற முதியோர் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ள பலருக்கு இற்றைவரை அக் கொடுப்பனவு கிடைக்கவில்லை என்பதையும்;

(ii) இது தொடர்பாக பிரதேச செயலகங்களிடம் வினவும் போது தற்போது கொடுப்பனவை பெறுகின்றவர்களில் ஏற்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் பிரகாரம் எஞ்சியோருக்கு கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விடயத்துக்கு பொறுப்பான தற்போதைய அமைச்சர், அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் முதியோர் கொடுப்பனவு வழங்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள நிலையில் இதுவரை அக்கொடுப்பனவு கிடைக்காத முதியோர்களுக்கு அக் கொடுப்பனவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

556/ '19

கௌரவ சி. சிறீதரன்,— தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சருமானவரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தபாலகங்கள், உபதபாலகங்கள் என்பன தரத்தின் அடிப்படையில் செயற்படுகின்றதா என்பதனையும்;

(ii) அம்மாவட்டத்தில் தர அடிப்படையில் தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்கள் தனித்தனியாக எத்தனையென்பதனையும்;

(iii) அவற்றுள் நிரந்தர காணி மற்றும் கட்டிட வசதிகளோடு இயங்கும் தபாலகங்கள், உபதபாலகங்கள் எத்தனையென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரதிபுரம், புன்னைநீராவி, பள்ளிக்குடா ஆகிய பிரதேசங்களில் உபதபாலகங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அறிவாராவென்பதனையும்;

(ii) ஆமெனின், 2016.09.05 ஆம் திகதி என்னால் அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் எனக்கு பிரதி இடப்பட்டு தபால்மா அதிபருக்கு அனுப்பப்பட்ட PPS & MR/HR/09-182 எனும் இலக்கமிடப்பட்ட 2016.09.09 ஆம் திகதிய கடிதங்களுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணங்களையும்;

(iii) கல்மடுநகர், திருநகர், கோணாவில், கரடிப்போக்கு, திருவையாறு, அம்பாள்குளம், முரசுமோட்டை, தருமபுரம், கண்டாவளை, புளியம்பொக்கணை, குஞ்சுப்பரந்தன், சிவநகர், முகமாலை, இயக்கச்சி, கிளாலி, எழுதுமட்டுவாள், சோறன்பற்று, தட்டுவன்கொட்டி, சுண்டிக்குளம், செட்டியகுறிச்சி, இரணைதீவு, கௌதாரிமுனை, பல்லவாராயன்கட்டு, நல்லூர், கிராஞ்சி, வேரவில் ஆகிய உப தபாலகங்களுக்கு நிரந்தர கட்டிட வசதிகள் எப்போது வழங்கப்படுமென்பதனையும்;

(iv) கிளிநொச்சி, பரந்தன், பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகியவற்றின் பிரதான தபாலகங்கள் நவீன வசதிகளுடன் கூடிய கணணி வசதியுடன் இயங்குகின்றதா என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

784/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை தேயிலைச் சபையினால், எமது இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள் மத்தியில் தேயிலையை பிரசித்தப்படுத்தும் நோக்கத்துடன் கொழும்பு குதிரைப் பந்தய மைதானத்தில் நிர்மாணிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் நிலையத்தை திறந்து வைப்பதற்காக செலவிடப்பட்ட தொகை யாது என்பதையும்;

(ii) 2014 தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரை மேற்படி நிறுவனம் பெற்ற திரட்டிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) 2017 ஆம் ஆண்டில் குறித்த சந்தைப்படுத்தல் நிலையத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி முடிவு யாரால் எடுக்கப்பட்டது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சந்தைப்படுத்தல் நிலையம் மூடப்பட்டதால் தேயிலைச் சபை இழந்த மொத்த தொகை யாது என்பதையும்;

(ii) தேயிலைச் சபை இழந்த உபகரணங்கள், மரத் தளபாடங்கள் மற்றும் கட்டட வாடகை போன்றவற்றை வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி சந்தைப்படுத்தல் நிலையத்தின் வளங்களை பயனுறுதியாக பயன்படுத்தத் தவறிய அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இவ்விடயம் தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் யாவை என்பதையும்;

இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

812/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லேரியாவ, கொட்டிக்காவத்த, 389/3F/2A ஆம் இலக்கத்தில் 12 வருட காலமாக வதியும் திரு. கே.எம்.எம். மர்சூக் வெளிநாட்டுக்கு சென்றிருந்த வேளையில் அவரது வீட்டுக்கு அருகில் அமைந்திருந்த சாக்கடைத் தொகுதியை மறித்து அத்துமீறி மதிலொன்றை நிர்மாணித்து கழிவு நீர்த்தொட்டி முழுமையாக மூடப்பட்டுள்ளதாகவும்;

(ii) மேற்படி அத்துமீறிய கட்டுமாணம் மேற்கொண்டிருப்பது 240/20B இலக்கத்தில் வதியும் மொஹமட் யூசுப் என்பவர் என்பதையும்;

(iii) கொட்டிக்காவத்த, முல்லேரியாவ பிரதேச சபையின் KMPS/04/1/CL/ 59/2017 ஆம் இலக்க 2018.05.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக இரு சாராரையும் அழைத்து இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அழைப்புக்கு பின்பும், சாக்கடைத் தொகுதியின் அடைப்பு அவ்வாறே இருப்பதாகவும்;

(ii) இப்பிரச்சினை தீர்த்துக்கொள்ள எந்தவொரு நிறுவனத்திடமிருந்தோ அல்லது அதிகாரிகளிடமிருந்தோ தீர்வு கிடைக்காமையின் காரணமாக இறுதியில் சனாதிபதி அவர்களுக்கும், பிரதமருக்கும் மற்றும் இவ்விடயம் தொடர்பான அமைச்சருக்கும் எழுத்து மூலமாக விடயத்தை முன்வைத்துள்ள போதிலும், இது வரை தீர்வு கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆகையால், கொட்டிக்காவத்த, முல்லேரியாவ பிரதேச சபை ஊடாக இதற்கு தீர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

821/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கோமரன்கடவல மகா வித்தியால வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட திருகோணமலை வடக்கு வலய ஆசிரிய பயிற்சி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளபோதிலும், குழாய் நீர் வசதிகளைப் பெற்றுக்கொள்ளப்படாமையால், இது தற்போதும் மூடப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆசிரிய பயிற்சி நிலையத்துக்கான திட்டத்தை தயார் செய்கையில் குடிநீர் மற்றும் ஏனைய நீர்த் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த விதம் யாது என்பதையும்;

(iii) கோமரன்கடவல மகா வித்தியாலயம் மற்றும் ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள கிணறுகளின் ஆழத்தை அதிகரித்து, அந்த நீரை RO நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் சுத்திகரிப்பதன் வாயிலாக நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதா என்பதையும்;

(iv) மேற்படி ஆசிரிய பயிற்சி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

835/ ' 19

கௌரவ கே. காதர் மஸ்தான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்குரித்தான வேப்பங்குளம் முதல் சிலாபத்துறை வரையிலான உள்ளக வீதி 2010 ஆம் ஆண்டில் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்த மற்றும் முடிவுறுத்திய திகதிகள்;

(ii) வீதியின் நீளம்;

(iii) அப்பாதையின் வழியே அமைந்துள்ள கிராமங்கள்;

(iv) அதற்குரிய ஒப்பந்தம் வழங்கப்பட்ட நிறுவனம்;

(v) நிறுவனத்தின் அப்போதைய உரிமையாளர்கள் (பங்காளர்கள்);

(vi) அந்நோக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை;

(vii) அப்பாதை தற்போது பயன்படுத்தப்படுகின்றதா;

யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

931/ '19

கௌரவ மொஹமட் நசீர்,— தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் (வக்ப் பிரிவில்) இல.R/0552/g/18 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கந்தவத்தை காதிர் ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் ஒசனகொடை பள்ளிவாசல் ஆகிய வணக்கஸ்தலங்களுக்குரிய வக்ப் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் (காணி, கடைகள், வீடுகள்) அமையப்பெற்றுள்ள இடத்திற்கு ஏற்றவாறான வர்த்தக ரீதியான பெறுமதி மற்றும் வதிவிட ரீதியான மதிப்பீட்டுப் பெறுமதிகளைத் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) அவ் வக்ப் சொத்துக்கள் சட்டரீதியாக குத்தகை ஒப்பந்தமொன்றின் மூலமாக குத்தகை பெறுநருக்கு வழங்குகையில் வர்த்தக ரீதியான பெறுமதி மற்றும் வதிவிட ரீதியான மதிப்பீட்டுப் பெறுமதிகளுக்கமைய வாடகைக் கூலியினை அறவிடுவதற்காக வக்ப் சபை நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதையும்;

(iii) மேற்படி வக்ப் சொத்துக்களைப் பயன்படுத்துகையில் சட்டரீதியாக குத்தகை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படாத, அனுமதியற்ற மற்றும் சட்டத்திற்கு முரணான குடியிருப்பாளர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு வக்ப் சபை செயற்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

941/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஒக்டோபர் மாதம் 6000 மெற்றிக் தொன் தோலுடனான மரமுந்திரிகையை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் உள்ளிட்ட ஆவணமொன்று சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையில் தோலுடனான மரமுந்திரிகை உற்பத்தி ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட தோலுடனான மரமுந்திரிகையின் அளவு ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(v) அவை இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

979/ '19

கௌரவ இஷாக் ரஹுமான்,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெக்கிராவ நகரிலிருந்து மரதங்கடவல வீதி ஊடாக ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஒலுகரந்தகம வழியாக அனுராதபுரம் தலாவ பிரதான வீதியுடன் இணையும், கெக்கிராவ பேரூந்து டிப்போ மற்றும் சர்வதேச பாடசாலைகள் அமைந்துள்ள 01 கிலோ மீற்றர் 300 மீற்றர் தூரத்தை கொண்ட வீதி மிகவும் சேதமடைந்துள்ள காரணத்தினால் அவ் வீதியை பயன்படுத்துகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(ii) அதிகாரத்தில் இருந்த அரசியல்வாதிகள் பலரும் தமது அரசியல் எதிரிகள் பலர் இவ்வீதியின் இரு மருங்கிலும் வசிப்பதால் இவ் வீதியை அபிவிருத்தி செய்யவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அரசியல் காரணங்களினால் இதுவரை அபிவிருத்தி செய்யப்படாத இவ் வீதியை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1014/ '19

கௌரவ இந்திக்க அநுருந்த ஹேரத்,— நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில், திவுலபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் மக்களது குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில், 2014ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட, திவுலபிட்டிய குடிநீர் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் இதுவரையில் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள முதலீடு யாது;

(iii) இதற்காக நிதி வழங்கும் செய்யும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்கள் முறையே யாவை;

(iv) மேற்படி கருத்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ள நிர்மாணக் கம்பனிகளின் பெயர் மற்றும் முகவரி யாது;

(v) இதுவரையில் மேற்படி கருத்திட்டத்துக்கான நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்காதிருப்பதற்கு காரணமாக அமைந்துள்ள காரணிகள் யாவை;

(vi) இப்பிரச்சினையைத் தீர்த்து, கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் திருப்தியடைவாரா;

(vii) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கும் மற்றும் பூர்த்தி செய்யப்படும் திகதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1033/ '19

கௌரவ காமினி லொக்குகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிலியந்தலை, மாகந்தன, கெக்குலாவிட்ட, இலக்கம் 191/சீ என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.எல். பீ. கொடிதுவக்குவின் புதல்வனாகிய திரு. விதுர விதத் அமரதுங்க 2009 ஆம் ஆண்டு கொழும்பு றோயல் கல்லூரியில் முதலாம் ஆண்டிற்கு பிள்ளைகளை சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் இடம்பெற்ற அநீதி தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பாடசாலைகளின் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதென்பதையும்;

(ii) அங்கு கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தலுக்கமைய திருமதி. கொடிதுவக்கு அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததுடன், இப்பிள்ளையை றோயல் கல்லூரியில் சேர்த்துக் கொள்வதற்கு அவ் ஆணைக்குழு கல்வி அமைச்சின் செயலாளருக்கு பரிந்துரையொன்றை முன்வைத்தது என்பதையும்;

(iii) இது தொடர்பில் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாததினால், திருமதி. கொடிதுவக்கு அவர்கள் பாராளுமன்றத்தின், பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு முறைப்பாடொன்றினை சமர்ப்பித்துள்ளார் என்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பிள்ளையை இப்பாடசாலைக்கு சேர்த்துக் கொள்வது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையினையும் மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் தவறியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) விதுர விதத் அமரதுங்க பிள்ளையை கொழும்பு றோயல் கல்லூரியில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் அறியத்தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1035/ '19

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.09.01 திகதியின் பின்னர் இலங்கைக்கு சமூகமளித்த வெளிநாட்டவர்களுள் 2019.05.01 ஆம் திகதி வரையில் நாட்டை விட்டு வெளியேறாத வெளிநாட்டுப் பிரசைகள் இருக்கின்றார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்கள் எந்நாட்டிலிருந்து வருகை தந்தார்கள் என்பதையும் வீசா அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) இவ்வாறு சட்டரீதியற்ற முறையில் நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அவர்களின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கங்கள் யாவை என்பதையும்;

(v) அவர்களின் இலங்கை முகவரியாக அறிவிக்கப்பட்டுள்ள முகவரிகளை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2019 நவம்பர் 20, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

24/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் தொலைபேசி வலையமைப்புக்கள் ஊடாக இடம்பெறும் உரையாடல்களைச் செவிமடுப்பதற்கான அல்லது ஒலிப்பதிவு செய்வதற்கான உபகரணத் தொகுதியொன்றை வெவ்வேறாக அரசாங்கத்தினால் அல்லது ஏதேனுமொரு நிறுவனமொன்றினால் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டோ பொருத்தப்பட்டோ உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி தொகுதியின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொகுதி ஊடாக கண்காணிக்கப்படவுள்ள தொலைபேசிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவ்வாறான தொகுதியொன்றை இறக்குமதி செய்வதன் நோக்கம் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

138/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— மலைநாட்டுப் புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) பதுளை மாவட்டத்தில், பெருந்தோட்டக் கம்பனிகளைச் சார்ந்ததாக சேவையாற்றுகின்ற ஊழியர்களிலும் அவர்களின் குடும்பங்களிலும் போசாக்கின்மை உயர் மட்டத்தில் காணப்படுகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) நல்லாட்சி அரசாங்கத்தினால் மக்களின் போசாக்கு மட்டத்தை அதிகரிக்கச் செய்வதற்காக வழங்கப்படுகின்ற "போசாக்குப் பொதி" வேலைத்திட்டத்திற்கு இணையாக, பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும் மேற்படி மக்களுக்கு போசாக்குப் பொதியொன்றை பெற்றுக் கொடுத்தல் பொருத்தமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாக அத்தகைய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

220/ '18

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) எஸ்பெஸ்ரோஸ் பாவனையை தடைசெய்ய அரசாங்கம் முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(ii) அதில் தாக்கம் செலுத்திய விடயங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தடைக்கென அரசாங்கம் அடிப்படையாகக்கொண்ட நிபுணர் குழு அல்லது நிபுணத்துவ அறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அரசாங்கம் மேற்படி தடையை நீக்க முடிவுசெய்த திகதி யாது என்பதையும்;

(v) அதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(vi) எஸ்பெஸ்ரோஸ் பாவனைக்கு உகந்ததென மீண்டும் சிபாரிசு செய்த வல்லுநர்கள் அல்லது நிபுணர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

372/ '18

கௌரவ வேலு குமார்,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான நாகஸ்தென்ன தோட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் தொழில் புரிந்த தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2000 முதல் 2015 ஆம் ஆண்டு வரை இத்தோட்டத்தில் தொழில் புரிந்து ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட ஆண் மற்றும் பெண் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) அவ்வாறு ஓய்வெடுக்கச் செய்யப்பட்ட தொழிலாளர்களில் இன்றளவில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படாத தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அவ்வாறான தொழிலாளர் ஒவ்வொருவரினதும் பெயர், அங்கத்தவர் இலக்கம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் பணிக்கொடை ஊதியத்தின் நிலுவை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

437/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2018.06.30 ஆம் திகதியில் குத்தகை அடிப்படையில் வெளியாட்களுக்கு வழங்கப்பட்டுள்ள, மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணிகளின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்களது பெயர், முகவரி, வழங்கப்பட்டுள்ள குத்தகைக் காலம், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை ஆகியவை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இக்காணிகளை குத்தகைக்கு வழங்குகையில், பகிரங்க சந்தை விலைகளுக்கு ஏற்ப சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, இதற்கேற்ப குத்தகைப் பணம் அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காணியை குத்தகைக்குப் பெற்ற நபர்கள், அவற்றை துணை குத்தகைக்கு வழங்கியிருப்பார்களேயாயின், அக்காணிகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு துணை குத்தகைக்கு வழங்கியவர்களின் பெயர், முகவரி, குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காலம், காணியின் அளவு மற்றும் குத்தகைப் பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) குத்தகை அறவீடானது இற்றைப்படுத்தப்படாமையாலும் சட்டவிரோத துணை குத்தகைக்கு வழங்கல் காரணமாகவும் கடந்த மூன்று வருட காலப்பகுதியில் சபை இழந்துள்ள நிதித்தொகை யாதென்பதையும்;

(iv) குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் துணை குத்தகைக்கு வழங்கலுக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

446/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசியக் கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், திரு. கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான சதி தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு நாலக சில்வா, எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர் ஒருவருடனும், புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுடனும், பாதாள உலகத்தின் பிரபலமான நபர் ஒருவருடனும் தொடர்புகளைப் பேணி வந்துள்ள ஒருவர் என்பதால் சனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகரிக்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) சனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் நாடளாவிய ரீதியில் மக்கள் சந்திப்புக்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதால், இவர்களின் போக்குவரத்திற்காக குண்டு துளைக்காத வண்டிகள் அல்லது அவ்வாறான வசதிகள் வழங்கப்படாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) இவ்விடயம் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்திய நாமல் குமார என்பவர் கூறுவதுபோல், சம்பவத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பச் சான்றுகளை 05 நிமிட குறுகிய காலத்தினுள் அழித்துவிட முடியுமென்பதால், விசாரணைகள் நடைபெறுகின்ற நிலையிலும் சம்பந்தப்பட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபரை சேவையில் வைத்திருப்பதற்கு பொலிஸ் மாஅதிபருக்கு இருக்கின்ற தேவை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

540/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இலங்கை விமானப் படையின் எயார் வைஸ் மார்ஷல் திரு.கே.ரீ.பீ.பீ.ஜயம்பதி அவர்கள் 2008.01.08 ஆம் திகதி சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டு தமது வாகனத்தை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு மீண்டும் சலுகை அடிப்படையில் வாகனமொன்றை இன்னும் 5 வருடங்களின் பின்னரே பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளபோதிலும் மேற்படி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்களைப் போலியாகக் குறிப்பிட்டு 2011.01.14 ஆம் திகதி முன்னாள் விமானப் படைத் தளபதியினதும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரினதும் விதப்புரைகளுடன் மீண்டும் சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்வதற்காக விண்ணப்பப்படிவமொன்றைச் சமர்ப்பித்து 2011.06.07 ஆம் திகதி உரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்துள்ளார் என்பதையும்;

(iii) அதன் பிரகாரம் அவர் சுற்றறிக்கை நியதிகளை மீறியுள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

(ii) சுற்றறிக்கை நியதிகளுக்கு எதிராக சலுகை அடிப்படையின் கீழ் மோட்டார் வாகனமொன்றை தருவிப்பதற்காக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு விதப்புரை செய்தமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கும் விமானப் படைத் தளபதிக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியான நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/ '18

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) தரப்படுத்தலில் முதலிடத்தை பிடித்திருந்த சுயாதீன தொலைக்காட்சி சேவை இன்றளவில் ஆறாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்குஅறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் வருடாந்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தை விற்பதற்கான செயற்பாடொன்று திட்டமிடப்படுகின்றதா என்பதையும்;

(iii) இந் நிறுவனத்தில் ஊழியர்களுக்கான சம்பளம் நிலையான வைப்புக்களிலிருந்து செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

879/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) புதிதாக பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தெரிவுகள் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படை யாதென்பதையும்;

(iv) அதற்கான அளவுகோல்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

885/ '19

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிதி அமைச்சரின் கீழ் "என்டபிரைஸ் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) அதன் அடிப்படை நோக்கம் யாது;

(iii) தற்போது குறிப்பிட்ட நோக்கம் எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டுள்ளது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2019.03.08 ஆம் திகதியளவில் களுத்துறை மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ள புதிய தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது ;

(ii) வழங்கப்பட்டுள்ள இக்கடனானது ஒவ்வொரு தொழில்முயற்சிகளுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2019.03.08 ஆம் திகதியளவில் அநுராதபுரம் மாவட்டத்தில் மேற்குறிப்பிட்ட வேலைத்திட்டத்தின் கீழ் கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ள புதிய தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை யாது;

(ii) வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட கடனானது ஒவ்வொரு தொழில்முயற்சிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) அநுராதபுர மாவட்டத்தில், கடன் வழங்கல் திட்டத்தின் நோக்கங்கள் எவ்வளவு தூரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன;

(iv) மேற்படி இரு மாவட்டங்களுக்கும் இடையே, குறிப்பிட்ட இக்கருத்திட்டத்தை செயற்படுத்துவதில் வேறுபாடு காணப்படுகின்றதா;

(v) அதனை மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1197/ '19

கௌரவ சனத் நிஷாந்த பெரேரா,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆனமடுவ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீட்டர் என்பதையும்;

(ii) அங்கு வசிக்கின்ற சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இவ்வாறான பாரிய உள்ளூராட்சி மன்றமொன்றிற்கு கிடைக்கின்ற பிரதான வருமானமாக அமைவது வாரச் சந்தையை குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் என்பதையும்;

(ii) ஆனமடுவ பிரதேச சபையின் வாரச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கென நகர அபிவிருத்தி அதிகாரசபையானது உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டது என்பதையும்;

(iii) அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட ஆனமடுவ வாரச் சந்தை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆனமடுவ பிரதேச சபைக்கு இதுவரையிலும் மீள ஒப்படைக்கவில்லை என்பதையும்;

(ii) உள்ளூரதிகாரசபைகள் சட்டத்தின்படி வாரச் சந்தை வருமானத்தை சேகரிப்பது பிரதேச சபையின் பொறுப்பாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) தற்போது நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள ஆனமடுவ வாரச் சந்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆனமடுவ பிரதேச சபைக்கு மீள ஒப்படைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1246/ ' 19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், 60/ஏ போலகல கிராம அலுவலர் பிரிவில் ஹல்பே விலவத்த எனப்படும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணியில் மிதக்கும் ஹோட்டல் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அங்கீகாரம் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்பட்ட தகவுதிறன்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டம் காரணமாக ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கம் தொடர்பான அறிக்கை பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஹோட்டல் கருத்திட்டம் ஆரம்பிக்கப்படுகின்ற மற்றும் நிறைவு செய்யப்படுகின்ற திகதிகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) களிமண்ணைத் தோண்டி எடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள மேற்படி (அ) (i)இல் குறிப்பிடப்பட்டுள்ள காணியில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள எல்லையை விஞ்சி களிமண் தோண்டி எடுக்கப்படுகிறது என்பதையும்;

(ii) இதன் காரணமாக பிரதேச சபை நிதியங்கள் மற்றும் உறுப்பினர்களின் நிதி ஏற்பாடுகளைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தின் விளையாட்டு மைதானத்தையும் பிரதேசவாசிகள் இழந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இவ்விடயம் தொடர்பில் அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1251/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்டப் பிரதேசங்களில் ஆசிரிய உதவியாளர்கள் சுமார் 3000 பேருக்கு மத்திய அரசினால் நியமனம் வழங்கப்பட்டு தற்போது அவர்களில் ஒரு பகுதியினர் அவர்களுடைய ஆசிரிய பயிற்சியினை நிறைவுசெய்துள்ளார்கள் என்பதனையும்;

(ii) மாகாண கல்விச் சேவையினால் அவர்களை ஆசிரியர் சேவைக்கு முறையாக உள்ளீர்த்தலோ அல்லது அவர்களுக்கான பொருத்தமான சம்பளத் திட்டமொன்றோ நடைமுறைப்படுத்தப்படவில்லையென்பதனையும்;

(iii) தற்போது ஒவ்வொரு மாகாணசபையும் வெவ்வேறான தீர்மானங்களின் அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களை வேறுபட்ட சம்பள அளவுத்திட்டங்களிற்கு உள்வாங்கியிருக்கின்றனவென்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் அவர்களுக்கு உரித்தான சம்பள அளவுத்திட்டம் யாது என்பதனையும்;

(ii) பயிற்சியின் பின்னர் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள அளவுத்திட்டம் மற்றும் ஆசிரியர் தரம் என்பன அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவென்பதனையும்;

(iii) அரசாங்கத்தினால் ஒரே தடவையில் வழங்கப்பட்ட நியமனங்கள் தொடர்பில் ஒவ்வொரு மாகாண சபையும் வேறுபட்ட தீர்மானத்தினை எடுப்பதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாவென்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1274/ '19

கௌரவ ரி.பீ. ஏக்கநாயக்க,— தொலைத் தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.06.30 ஆம் திகதியில் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் எண்ணிக்கை, அவர்கள் பணியாற்றும் நாடுகள், பயிற்றப்பட்டவர்கள், பயிற்றப்படாதவர்கள் மற்றும் ஆண், பெண் பால் வேறுபாட்டுக்கு ஏற்ப வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத உழைப்பாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வெளிநாடுகளில் பணியாற்றுவதற்காக பயிற்றப்பட்ட உழைப்பாளிகளை அனுப்புவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1287/ '19

கௌரவ ரோஹிணி குமாரி விஜேரத்ன,— ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகப்பிரிவிலும் இருக்கின்ற முதியோர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) முதியோர்களுக்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கைப் பட்டியலில் காணப்படுகின்ற மாத்தளை மாவட்டத்திலுள்ள சகலருக்கும் துரிதமாக அக்கொடுப்பனவினை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 நவம்பர் 21, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

26/ '18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் இலங்கை பொலிஸாருக்கு கிடைத்துள்ள பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டத்திற்கு அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்சமயம் விசாரணைகள் நிறைவு பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

163/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள பிரிவெனாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரவெனாவிலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பிரிவெனாக் கல்வியை தரமுயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

438/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2015 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி உள்ளிட்ட சட்ட ரீதியான கொடுப்பனவுகள் பற்றிய விபரத்தை தனித்தனியே வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இற்றைவரையில் செலுத்தப்படாத கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை தனித்தனியே வருடாந்த அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதியத்துக்கு பணம் செலுத்தப்படாமை பற்றி தொழில் ஆணையாளர் அலுவலகத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

541/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்னர் பொலிசு உத்தியோகத்தர்களுக்கு ரூபா 150,000 சலுகை விலைக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி மோட்டார் சைக்கிள்களை வழங்குகையில் எவ்விதமான நிபந்தனைக்கும் கட்டுப்படுத்தவில்லை என்பதையும்;

(iii) ஆயினும் பெரும்பாலும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொண்ட பொலிசு உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் ரூபா 150,000 - ரூபா 200,000 இடைப்பட்ட பணத்தொகையைச் செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) அப்பணத்தொகையைச் செலுத்தும்வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படமாட்டாதென அவர்களின் சேவை நிலையங்களிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும் ;

(v) இதற்கிணங்க இளைப்பாறிய பெருந்தொகையான பொலிசு உத்தியோகத்தர்கள் நீண்டகாலமாக ஓய்வூதியம் கிடைக்காமையால் நிர்க்கதி நிலையிலுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தும்பொருட்டு தாமதமின்றி பொருத்தமான முறையியலொன்றை வகுப்பாரா;

(ii) ஆமெனில் அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

638/ '18

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்குப் பொறுப்பான முன்னாள் பிரதிப் பொலிஸ் மாஅதிபரினால் சனாதிபதிக்கு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்ற சதித் திட்டம் தொடர்பில்,

(i) மேற்படி பொலிஸ் மாஅதிபரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவரின் அலுவலகம், வீடு மற்றும் கையடக்கத் தொலைபேசி அழைப்புக்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஊழல் எதிர்ப்பு படையணியின் நடவடிக்கைப் பணிப்பாளர் என்று கூறப்படுகின்ற திரு. நாமல் குமாரவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவதனால், அது தொடர்பிலான உண்மைத்தன்மையை கண்டறியும் வரை, அவரின் பாதுகாப்பு எவ்வாறு உறுதி செய்யப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) எதிர்கால சட்ட நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாதவாறு இந்த சம்பவத்தின் தற்போதைய நிலைமை எவ்வாறானது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(இ) சனாதிபதியின் பாதுகாப்பை அவரின் விருப்பத்திற்கு அமைய தீர்மானிக்க முடியுமாயினும், முன்னாள் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோரின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

751/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018.07.01 தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை பிரதம அமைச்சர் கலந்து கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு விஜயத்திலும் பங்கேற்ற நபர்களின் பெயர்கள், அவர்கள் அரச பதவி வகிக்கும் பட்சத்தில் அப்பதவிகள் மற்றும் விஜயத்தில் பங்கேற்றமைக்கான காரணம் என்பன யாவை என்பதையும்;

(iii) 2016.01.01 தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரை பிரதம அமைச்சர் பங்கேற்ற வெளிநாட்டு விஜயங்களின் பொருட்டு அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் உட்பட ஒவ்வொரு விஜயத்திற்காகவும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

916/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தொலைத் தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சூரியவெவ கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதற்காக நிதி பெற்றுக்கொள்ளப்பட்ட மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) இதுவரை அங்கு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டிகளின் எண்ணிக்கை மற்றும் போட்டி வகைகள் யாவையென்பதையும்;

(iv) இது வரை விளையாட்டு மைதானத்தின் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் அதன் பராமரிப்புச் செலவினங்கள் எவ்வளவென்பதையும்;

(v) இந்த விளையாட்டு மைதானத்தை முன்னேற்றுவதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1029/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இல. 240 மூலம் கட்டட மற்றும் நிர்மாணத்துறையில் ஊழியர்களைப் பயிற்றுவிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுக்கமைய மூன்று மாதங்களுக்கு இளைஞர்கள் 7500 பேர் வீதம் வருடமொன்றுக்கு 30,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் இலக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) முப்பதாயிரம் வரையிலான பெருமளவு இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த ஒவ்வொரு நிறுவனத்துக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1052/ '19

கௌரவ சனத் நிசாந்த பெரேரா,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கை நிருவாகச் சேவைக்குரிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(ii) திணைக்களத்தின் பதவிகளில் தற்போது வெற்றிடம் நிலவுமாயின் மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iii) குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் பதவி இலங்கை நிருவாகச் சேவையின் எத்தரத்திற்குரிய பதவியாகும் ;

(iv) மேற்படி பதவி இன்றளவில் வெற்றிடமாகி இருப்பின் வெற்றிடமாகிய திகதி யாது;

(v) நாட்டில் நிலவுகின்ற நிகழ்கால பாதுகாப்பு நிலைமைக்கிணங்க இப்பதவியை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் நாட்டின் பாதுகாப்பு நிலைமைமீது இது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(vi) ஆமெனில் மேற்படி வெற்றிடம் நிரப்பப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1114/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அட்ட பிரிக்கரவில் (எட்டு வகைப் பூஜைப் பொருட்கள்) உள்ளடக்க வேண்டிய பொருட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் வடமேல் மாகாணத்தில் விற்கப்படுகின்ற அட்ட பிரிக்கரவில் மேற்படி பொருட்கள் உள்ளடக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அட்ட பிரிக்கரவின் உரிய தரத்தை பாதுகாப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(அ) இன்றேல், ஏன்?

1176/ '19

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் தற்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மணநீக்க வழக்குகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மணநீக்க வழக்குகள் ஒவ்வொரு மாவட்ட மற்றும் ஒவ்வோர் இன ரீதியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) 2008 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மணநீக்கம் செய்ய அங்கீகாரம் கிடைத்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்டம் மற்றும் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1178/ '19

கௌரவ விதுற விக்கிரமநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினை தனியார்மயப்படுத்தும்போது தொழில்வாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு 05 வருடங்களுக்குரிய சம்பளங்கள் மற்றும் சகல கொடுப்பனவுகள் உட்பட நட்டஈட்டினைப் பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதையும்;

(ii) நட்டஈட்டினை செலுத்துவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட கூட்டுத்தாபனத்தின் 06 எழுதுவினைஞர்களுள் இருவருக்குரிய நட்டஈட்டில் கொடுப்பனவுகளை உள்ளடக்காது சம்பளத்தினை மாத்திரம் கவனத்திற்கொண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதன் காரணமாக நட்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதனை நிராகரித்துள்ளமையையும்;

அவர் அறிவாரா என்பதையும்?

(ஆ) (i) தொழில்வாய்ப்புக்களை இழந்தவர்களில் ஒரு பகுதியினருக்கு மீண்டும் தொழில்வாய்ப்புக்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) தனியார்மயப்படுத்தும்போது நட்டஈட்டினை செலுத்துகையில் EPF மற்றும் ETF நன்மைகளைச் செலுத்துவதற்குரிய இயலுமை இருப்பினும், அப்பணத்தொகை தொழில்வாய்ப்புக்களை இழந்த ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதையும்;

(iii) தனியார்மயப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக எந்தவொரு ஊழியரினதும் தொழில் அற்றுப்போகச் செய்யப்படமாட்டதென்று உறுதியளிக்கப்பட்டிருப்பினும், தொழில்வாய்ப்பை இழந்துள்ள சுமார் 1500 பணியாளர்களுக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படாததுடன், அவர்களுள் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளார்கள் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ள பணியாளர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1237/ ' 19

கௌரவ நிசாந்த முதுஹெட்டிகமகே,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நோர்வே அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கிய காலி பனிக்கட்டி பொறியகமானது சுனாமி பேரழிவின் பின்னர் யப்பான் அரசாங்கத்தின் அன்பளிப்பாக புனரமைக்கப்பட்டதன் பின்னர் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் காலி துறைமுகத்தினால் இயக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி பொறியகத்தினால் நாளொன்றுக்கு 1024 பனிக் கட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டதோடு, பனிக் கட்டியொன்று ரூபா 220/- என்ற சகாய விலைக்கு மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அலுவலர்களின் முகாமைத்துவ பலவீனம் காரணமாக உற்பத்தி நாளொன்றுக்கு 800 பனிக் கட்டிகள் வரை குறைந்தது என்பதையும்;

(iv) மீனவர்களின் எதிர்ப்பை கவனத்தில் கொள்ளாது பொறியகம் தனியார் துறைக்கு உடைமை மாற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(v) இதனால் காலித் துறைமுகத்தைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு பாரிய அநீதி நேர்ந்துள்ளதுடன், 72 அலுவலர்களின் சேவை ஸ்திரமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த பொறியகம் தனியார் துறைக்கு உடைமை மாற்றப்பட்டிருப்பின், அதன் மூலம் ஜப்பான் மக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட அன்பளிப்பு தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) இதனால் எதிர்கால சர்வதேச அன்பளிப்புகள் பின்வாங்கச் செய்விக்கப்படலாம் என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) இந்த நிலைமையைத் தடுத்து மீண்டும் அந்த நிறுவனத்தை முன்பிருந்த நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவார்?

(ஈ) இன்றேல், ஏன்?

1247/ ' 19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவின், 60/ஏ போலகல கிராம அலுவலர் பிரிவில் ஹல்பே விலவத்த எனப்படும் காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஒன்று என்பதையும்;

(ii) மேற்படி காணியில் மிதக்கும் ஹோட்டல் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி காணி போலியான ஆவணம் புனையப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மிதக்கும் ஹோட்டல் கருத்திட்டம் என்ற போர்வையில் களிமண் தோண்டும் கருத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1972 இல் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்ட காணி, ஏதேனும் ஓர் அடிப்படையில் உடைமை மாற்றப்பட்டிருக்குமாயின் குறித்த நபர் மூன்றாந் தரப்புக்கு உடைமை மாற்ற / விற்பனை செய்ய முடியுமா என்பதையும்;

(ii) சுற்றாடலுடன் ஒன்றித்த கருத்திட்டமொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்குமாயின், அது தொடர்பில் பின்தொடர் ஆராய்வு மற்றும் ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்படுவதில்லையா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1275/ '19

கௌரவ ரீ.பீ.ஏக்கநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனங்கள் மூலமாக குப்பைகூளங்களை அகற்றும் செயன்முறை உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

(ii) இதற்காக அமைச்சின் கீழ் யாதேனுமொரு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவன மட்டத்தில் கழித்தொதுக்கிய கண்ணாடிகளை மீள்சுழற்சி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படுகிறதா;

(iv) ஆமெனில், அந்த இடத்தின் முகவரி யாது;

(v) இன்றேல், இது தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 நவம்பர் 22, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

169/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண முதலமைச்சரின் நீர்ப்பாசன ஆலோசகராக திரு எஸ்.எச். ஆர். பந்துசேன நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இவர் அப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி மற்றும் செலுத்தப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iii) இவருடைய கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவை என்பதையும்;

(iv) நீர்ப்பாசன விவகாரங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்குமளவுக்கு இவரிடமிருந்த சிறப்புத் தகைமைகள் யாவை என்பதையும்;

(v) இந் நியமனம் தொடர்பாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

277/ '18

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) அரிசி இறக்குமதியின்போது ஒரு கிலோ அரிசிக்கு அறவிடப்பட்ட வரித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இதற்கமைவாக 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஆண்டுகளில் அரிசி இறக்குமதிக்காக அறவிடப்பட்ட வரித் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆண்டுகளில் அரிசி விலையின் தளம்பல் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

342/ '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறிமாகம எனும் கிராமத்தையும் கலா வாவியையும் இணைப்பதற்கு பாலமொன்றை நிருமாணிக்க திட்டமிடப்பட்டு அதற்கான அடிக்கல் நாட்டப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பணியை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

420/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த தினம் நிறைவுற்ற தெற்காசிய கனிஷ்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்ற விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் உத்தியோகத்தர்களது எண்ணிக்கை மற்றும் அவர்களது பெயர்கள் யாவை;

(ii) மேற்குறிப்பிட்ட போட்டியில் இலங்கை வென்றெடுத்த பதக்கங்களின் எண்ணிக்கை மற்றும் குறிப்பிட்ட பதக்கங்களை வென்றெடுத்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளது பெயர்கள் யாவை;

(iii) மேற்படி விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு நிதிசார் அன்பளிப்பினை வழங்குவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளதா;

(iv) ஆமெனில், இதுவரை நிதிசார் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களது பெயர்கள் யாவை;

(v) இதுவரையில், நிதிசார் அன்பளிப்புகள் வழங்கப்படாதுள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இந்த அன்பளிப்புக்களை விரைவில் வழங்குவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

427/ '19

கௌரவ கனக ஹேரத்,— ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் மிளகு பயிரிடப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நாட்டின் மிளகு விளைச்சல் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) 2015 முதல் 2018 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி செய்துள்ள மிளகின் அளவு ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) இந்த நாட்டில் உற்பத்தி செய்துள்ள மிளகின் அளவிற்கும் அதிகமான அளவு மேற்படி ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், இலங்கை மிளகு இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்;

(vi) இலங்கை மிளகு இறக்குமதி செய்கின்ற நாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கைக்கு மிளகு இறக்குமதி செய்வதால் இந்நாட்டு மிளகு செய்கை அழிவடைவதோடு அப்பாவி மிளகு செய்கையாளர்களுக்கு அநீதி ஏற்படுத்தி உயர் மட்ட வர்த்தகர்கள் சிலருக்கு மாத்திரம் நன்மை ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) மிளகு கைத்தொழிலை மீண்டும் மேம்படுத்த ஏதேனும் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது யாதென்பதையும்;

(iv) மேற்படி வேலைத்திட்டம் செயற்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

506/ '19

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் திரு. அஜித் நிவாட் கப்ராலின் தங்கையான திருமதி சிரோமணி விக்கிரமசிங்ஹ, லங்காபுத்ர வங்கியில் பிரதம நிறைவேற்று அலுவலராக பணியாற்றிய காலத்தில் ஊழல் மற்றும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக ப்ரயிஸ் வோட்டர்ஹஷஸ் கூப்பர்ஸ் கணக்காய்வு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 2006 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை வங்கிச் சட்டத்தை மீறி அரசியல் ஆதரவாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மீளச் செலுத்துவதற்கான ஆற்றலைக் கவனத்திற்கொள்ளாது அரசக் காணிகள், விகாரைகளுக்குரிய காணிகள். தரிசுக் காணிகள் மற்றும் மாணிக்கக் கற்களாக காண்பிக்கப்பட்ட படிகக் கற்கள் ஆகியவற்றை உத்தரவாதமாகப் பெற்று கடன் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வாறு கடன் பெற்றுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான ஒவ்வொரு நபரும் நிறுவனமும் பெற்றுள்ள கடன் தொகை யாது என்பதையும்;

(iii) இற்றைவரை மேற்படி கடன் தொகையில் மீளச் செலுத்தப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

(iv) இவ்வாறு கடன் வழங்க அனுமதியளித்த அப்போதைய பிரதான நிறைவேற்றுனர் உட்பட பணிப்பாளர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

(vi) இன்றேல், அது தொடர்பில் முறையான சட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

674/ '18

கௌரவ சந்திம கமகே,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவை பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் இலக்கம் 635 கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள மஹவெவ பாலம் பழுதடைந்துள்ளதென்பதையும்;

(ii) அப்பாலத்தினை மறு சீரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளைக்கோரி வடமத்திய மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரினால் மதிப்பீடொன்று தங்கள் அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அமைச்சின் செயலாளர் இதுவரை நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுத் தரவில்லையென்பதையும்;

(iv) எதிர்வரும் மழை காலத்தில் மஹவெவ பாலம் அழிவடையும் பட்சத்தில் 8 கிராமங்களில் வாழும் சுமார் 7000 விவசாய மக்கள் போக்குவரத்துச் சிரமங்களுக்கு உள்ளாகி நிர்க்கதி நிலைக்கு உள்ளாவார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தினை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில் அதற்காக எடுக்கப்படும் காலம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

766/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள் என்றழைக்கப்படுகின்ற வைய்ன் ஸ்ரோஸ்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி உரிமைப்பத்திரம் பெற்றுள்ளவர்களின் பெயர், முகவரி, உரிமப்பத்திர இலக்கம் மற்றும் முதலில் உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள திகதி அல்லது ஆண்டு மற்றும் மேற்படி வியாபார நிலையம் பேணிவரப்படுகின்ற இடம் என்பன தனித்தனியே யாது என்பதையும்;

(iii) செறிவின் விகிதத்திற்கு அமைய மற்றும் ஒவ்வொரு வர்த்தகப் பெயர்களுக்கு அமைய 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை வருடாந்தம் வெளிநாட்டு மதுபானத்தின் உபயோகம் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

782/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை சிறுபற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கு கடமைத் தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள வாகனத்தின் வகை மற்றும் பதிவிலக்கம் யாது;

(ii) மேற்படி வாகனம் அதிகாரசபைக்கு எவ்வடிப்படையில் பெறப்பட்டது; குத்தகை அடிப்படையிலாயின் அந்நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) இந்த வாகனத்தைப் பெற்றுக்கொள்ளல் முறைசார்ந்த பெறுகை செயற்பாங்கின் கீழ் இடம்பெற்றுள்ளதா ;

(iv) இந்த பெறுகைக்குழுவில் பெறுகை அலுவல்களுக்கு பொறுப்பான அலுவலராகவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகவும் செயலாற்றிய அலுவலர்கள் யாவர்;

(v) பெறுகைச் செயற்பாங்கிற்கு அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) தவறானவகையில் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் மேற்படி தவறினைப் புரிந்த அலுவலர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

847/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— அமைச்சரவை அந்தஸ்தற்ற வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற ஒலிபரப்புச் சேவைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் அவ்வொவ்வொரு ஒலிபரப்புச் சேவையும் ஈட்டிய வருமானம் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் ஒவ்வொரு வருடங்களுக்கமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அக்காலப்பகுதியினுள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

866/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கரந்தன, விஹாரஹேன பிரதேசத்தில் பேணிவரப்படும் நீர் போத்தலில் அடைத்தல் தொழிற் முயற்சி காரணமாக பிரதேசத்தில் குடிநீர் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இத்தொழில்முயற்சி ஆரம்பத்தில் 2003.12.16 ஆம் திகதி "ரபர் ப்ரடக்ட்ஸ்" எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு பேணிவரப்பட்டதுடன் 2017.06.30 ஆம் திகதி "விஹாரா நெச்சுரல் ப்ரடக்ட்ஸ்" எனும் பெயரில் குழாய் கிணற்றின் மூலம் நீரை பெற்று அதனை போத்தலில் அடைத்து விற்பனை செய்ப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) பிரதேச மக்களின் பாரியளவிலான எதிர்ப்புகளை கவனத்திற் கொண்டு இது சம்பந்தமாக நான் பல கடிதங்களை அனுப்பிய போதும் இற்றைவரை இதற்கான உரிய தீர்வு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(iv) இது சம்பந்தமாக விசாரணையொன்றை நடாத்தி சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் நீர் மட்டம் வீழ்ச்சியடைவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

900/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சனவரி தொடக்கம் 2018 திசெம்பர் வரை சர்வதேச ரீதியாக உதவிகளைப் பெற்றுக்கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) பெற்றுக் கொண்ட உதவிகளுள் நிதியுதவி,பொருளுதவி மற்றும் கருத்திட்ட உதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அன்பளிப்பு செய்த நாடுகள் மற்றும் அந்நாடுகளில் உதவிகளை அன்பளிப்பு செய்த நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த உதவிகளால் எமது நாட்டில் செயற்படுத்திய கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) உதவிகளைப் பெற்றுக் கொண்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதானிகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

933/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. ஏ.எச்.எம். பைருக் கொழும்பு, தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் சேவையில் ஈடுபட்டிருந்து மேமா/கொ/வலய/ஆநி/7 என்ற இலக்கமுடைய 2006.06.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக 1989.03.31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட உதவி ஆசிரியர் என்பதனை அறிவாரா;

(ii) மேற்படி திகதியிலிருந்து ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட பைருக் அவர்களுக்கு 1997.01.15 ஆம் திகதியிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவிற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்த போதும் இதுவரையில் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்காது தாமதமடையச் செய்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) 25 வருட காலமாக ஆசிரிய சேவையில் ஈடுபட்டிருந்து தற்போது வயோதிப நிலையில் உள்ள பைருக் அவர்களுக்கு உரித்தான ஓய்வூதிய கொடுப்பனவை விரைவாக பெற்றுக் கொடுப்பதற்காக கல்வித் திணைக்களத்தினூடாக உரிய கோப்புக்களை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் ஓய்வூதியத்தை தாமதிக்காது பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

969/ '19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பொது நிருவாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொட்டகல, சிறிபெரகும் வித்தியாலயத்திற்கு அருகே அமைந்திருந்த கோழிப்பண்ணை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்களின் எதிர்ப்புக் காரணமாக 2015 ஆம் ஆண்டு அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோழிப் பண்ணைக்குப் பதிலாக, தற்போது பாரியளவிலான மாட்டுத் தொழுவமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) மாட்டுத் தொழுவத்தை தாபிப்பதன் மூலம் அருகே அமைந்துள்ள சிறிபெரகும் வித்தியாலயத்தின் மாணவர்களின் சுகாதார நிலைமைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக் காரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மாட்டுத்தொழுவம் ஒன்றை நிர்மாணிப்பதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் கவனத்தில் கொண்டு இந்த மாட்டுத் தொழுவத்தை நிர்மாணிப்பதை நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1030/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவு இலக்கம் 243 இன் படி, சுற்றுலாக் கைத்தொழில் துறை தொடர்பான பயிற்சிப் பாடநெறிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் எவ்வாறு உபயோகிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்கூறிய முன்மொழிவில் குறிப்பிடப்பட்டவாறு காலாண்டு ஒன்றுக்கு 3000 பேர் வீதம் வருடமொன்றுக்கு 12,000 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டதா என்பதையும்;

(iii) இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்திய நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் யாவை என்பதையும்; அந்த நிறுவனங்கள் அல்லது அமைப்புகளுக்கு வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுத் தொகையைக் குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2019 திசெம்பர் 06, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.11/' 18

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/ '19

கௌரவ முஹம்மது நசீர்,— ஹஜ் யாத்திரைச் சட்டமொன்றை அறிமுகப்படுத்தல்,— வருடாந்தம் ஹஜ் யாத்திரையில் ஈடுபடுகின்ற இலங்கை பக்தர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவும், அது தொடர்பான நிருவாக அமைப்பொன்றை தாபித்து சட்ட முறையான ஏற்பாடுகளை வகுக்கவும், அரசாங்கத்தால் "ஹஜ் யாத்திரைச் சட்டமொன்று" அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்தல்,— கண்டி மாவட்டத்தை புவியியல் ரீதியில் நோக்குகையில் கடல் பிரதேசத்திலிருந்து தூரமாக அமைந்திருப்பதனால் இம்மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் புரதத் தேவையை நிறைவு செய்வதற்காக கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்து குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பினால் ஏற்பட்டுள்ள சுற்றாடல் பாதிப்பைக் குறைத்தல்,— கண்டி மாவட்டத்தில் பைனஸ் மர வளர்ப்பு காரணமாக சூழலுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளமையால் இந்த சூழல் பாதிப்பை குறைப்பதற்கான துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/ '19

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— கண்டி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகளை அகற்றுதல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கண்டி வைத்தியசாலையை இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், மேற்படி வைத்தியசாலை வளவில் உள்ள அங்கீகாரமற்ற நிர்மாணிப்புகள் அனைத்தையும் அகற்றத் துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் பெருவாரியாகப் பரவும் நோய்களைத் தடுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்குக்குப் பின்னர் அனர்த்தத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் நீர் வடிந்தோடியதன் பின்னர் எலிக்காய்ச்சல், வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக குறிப்பிட்ட பிரதேசங்களில் பொது சுகாதார பரிசோதகர்களினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதனால், அத்தகைய பெருவாரியாகப் பரவும் நோய் நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து உச்ச பயன் பெறுதல்,— ஒரு விவசாய நாடான எமது நாட்டின் ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலிருந்து விவசாய கைத்தொழிலுக்கு பாரிய சேவையாற்றப்படுகின்ற போதிலும், இந்த ஆற்று நீர் பாரியளவு பயன்படுத்தப்படாது கடலுடன் கலப்பதாக அறிவியல்சார் ஆராய்ச்சிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையால், மகா பராக்கிரமபாகு மன்னனுடைய காலத்தைப் போன்று இந்த நீர் வளத்தைக் கொண்டு நாட்டின் அபிவிருத்திக்கு உச்ச பயன் பெறக்கூடியவாறு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/ '19

கௌரவ ஆனந்த அளுத்கமகே,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்தல்,— கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டுக்கு திறமையைக் கொண்டுள்ள பெரும் எண்ணிக்கையானோர் இருப்பதனால் மேற்படி ஆட்களை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டுசெல்லக் கூடியவகையில் கண்டி மாவட்டத்தில் ஜூடோ விளையாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்துக்குரித்தாக இருந்த கரப்பந்தாட்ட விளையாட்டின் பெருமையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இற்றைக்கு ஏறத்தாழ ஒரு தசாப்தத்துக்கு முன்னர் புத்தளம் மாவட்டத்தின் பாடசாலைகளிலிருந்து உருவாகிய திறமைவாய்ந்த கரப்பந்தாட்ட விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெளிப்படுத்திய திறைமைகளின் காரணமாக புத்தளம் மாவட்டத்துக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு மூலம் பெருமையானதோர் இடம் கிடைத்திருந்த போதிலும், இன்றளவில் அந்த நிலைமையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால், மீண்டும் அந்தப் பெருமையை புத்தளம் மாவட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலை ஒன்றைத் தாபித்தல்,— மக்களின் போஷாக்குத் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான புரதச் சத்தை பெற்றுக் கொடுக்கவும், வருடாந்தம் ரின் மீன் இறக்குமதிக்காக வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேலும் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்கத் தேவையான அனைத்து வளங்களும் புத்தளம் மாவட்டத்தில் இருப்பதாலும், அம்மாவட்டத்தில் ரின் மீன் தொழிற்சாலையொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையை சிலாபம் வரை நீடித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் அதிவேக நெடுஞ்சாலைகள் மிக முக்கியமானவையாக உள்ளதாலும், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டம் மிக துரிதமாக அபிவிருத்தியடைந்து வருவதாலும், அந்த அபிவிருத்தி வேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் பொருட்டு தற்போது கொழும்பிலிருந்து கட்டுநாயக்க வரையுள்ள அதிவேக நெடுஞ்சாலை சிலாபம் வரை நீடிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வடமேல் மாகாணத்தில் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக மருத மர நடுகைக் கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— மண்ணில் உள்ள நீரைப் பாதுகாக்கும் ஆற்றலைப்போன்றே மண்ணரிப்பினை குறைக்கும் பண்புடைய நீண்ட ஆயுட்காலத்தைக்கொண்ட மருத மரத்தை வடமேல் மாகாணத்தின் குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களை சார்ந்ததாக நடுகைசெய்யும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— பத்தலங்குண்டு தீவுவாசிகளான மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தின் கற்பிட்டிக் குடாநாட்டுக்கு அருகில் உள்ள பிரதான தீவுகளிலொன்றான பத்தலங்குண்டு தீவைச்சேர்ந்த மீனவர்களின் அடிப்படைத் தேவைப்பாடுகள் இற்றைவரை முறையான கவனத்திற்கு இலக்காகவில்லை என்பதால், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் அம்மக்களின் அடிப்படைத் தேவைப்பாடுகளை நிறைவுசெய்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— தற்பொழுது உலகில் நீர்வாழ் தாவரங்களுக்கு பெருங் கேள்வி நிலவுவதோடு, அதன் மூலம் எமது நாட்டுக்கு பெருமளவில் அந்நியச் செலாவணியை ஈட்டக்கூடிய பரந்துபட்ட வாய்ப்பு உருவாகியுள்ளதோடு, அண்மையில் ஜப்பான் நாட்டு நிபுணர்களால் தமது ஆராய்ச்சி அறிக்கையொன்றில் நீர்வாழ் தாவர வளர்ப்புக்கு புத்தளம் மாவட்டத்தின் கரையோரம் சார்ந்த பிரதேசம் மிகவும் உகந்ததெனச் சுட்டிகாட்டியுள்ள பின்னணியில் நீர்வாழ் தாவர வளர்ப்பு கருத்திட்டமொன்றைப் புத்தளம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றை நிறுவுதல்,— வடமேல் மாகாணத்தில் தற்போது புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரித்துள்ளமையினால் அந்த நோயாளிகளுக்காக வடமேல் மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலையொன்றை நிறுவ வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 27/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலை ஒன்றைத் தாபித்தல்,— இலங்கையின் பிரதான சிறுவர் வைத்தியசாலையாகிய றிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையில் காணப்படுகின்ற பாரிய இட நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் வட மேல், வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பயன்தரும் வகையிலும் வட மேல் மாகாணத்தில் சிறுவர் வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலை ஒன்றைத் தாபித்தல்,— நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தினை ஒரு சுற்றுலா வலயமாக முன்னேற்றுவதற்கு எதிர்பார்ப்பதால் இக்கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு தேவையான மனித வளத்தை பயிற்றுவிப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் ஹோட்டல் பாடசாலையொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/ '19

கௌரவ அசோக்க பிரியந்த,— கல்பிட்டி சார்ந்த பிரதேசங்களில் பனைக் கைத்தொழிலை ஊக்குவித்தல்,— வட மேல் மாகாணத்தின் கல்பிட்டி பிரதேசத்தில் பனை சார்ந்த கைத்தொழில் கடந்த சில வருடங்களாக பெரும் சரிவை சந்தித்துள்ளதால், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம், எதிர்காலத்தில் கல்பிட்டி பிரதேசத்தை சுற்றுலா நகரமாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கு நேர் ஒத்ததாக அப்பிரதேசத்தில் பனைக் கைத்தொழிலை ஊக்குவிக்கும் வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கோழிப் பண்ணை உரிமையாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற 'பற்றரி கேஜ்' முறைமையை நிறுத்துதல்,— இலங்கை பண்டைய காலந்தொட்டு உயிரினங்கள் மீது அன்பு செலுத்துகின்ற பௌத்த நாடாக விளங்கிய போதிலும், இன்றளவில் சில கோழிப் பண்ணையாளர்கள் பயன்படுத்துகின்ற பற்றரி கேஜ் முறைமை காரணமாக விலங்குகள் பெரும் சித்திரவதைக்குள்ளாவதனாலும், அதிக முட்டை உற்பத்தியின் மூலம் சிறிய அளவிலான கோழிப் பண்ணையாளர்களின் தொழில்கள் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியுள்ளதன் காரணத்தினாலும், மேற்படி மனிதாபிமானமற்ற முறைமையை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வருடாந்தம் பால் மா இறக்குமதிக்காக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுவதுடன், இப்பணத்தை எமது நாட்டிற்குள்ளேயே சேமித்துக்கொள்ள முடியுமெனில் அது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தியாக அமையுமென்பதால் பால் உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு பாற் பண்ணையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு துரிதமான நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தினுள் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்,— வடமேல் மாகாணத்திலுள்ள குருநாகல் மாவட்டம் மிகவும் பெருமைவாய்ந்த வரலாற்றிக்கு உரிமை கோரும் தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிவாய்ந்த பல இடங்களைக் கொண்டதொரு மாவட்டமாக இருப்பதுடன், பண்டைய காலத்தில் குருநாகல், தம்பதெனிய மற்றும் யாப்பகுவ போன்ற இராச்சியங்களும் இம்மாவட்டத்திலேயே அமைந்திருந்ததெனினும் தற்போது இந்த புராதன இடங்களின் பாதுகாப்பு சம்பந்தமாக பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளதால் மேற்படி தொல்பொருளியல் இடங்களை பேணுவதற்காக துரிதமான நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சகல துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்தல்,— எந்தவொரு நாட்டிலும் வெற்றிகரமான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று காணப்படுவது அந்த நாட்டில் வாழும் பிரசைகளுக்கு முக்கியமாகும் என்பதுடன், இலங்கையில் அரசதுறை மற்றும் தனியார்துறை ஊழியர்களுக்காக ஓய்வூதிய முறையொன்று அல்லது ஊழியர் சேமலாப நிதிய முறையொன்று நடைமுறையில் இருந்த போதிலும், நாட்டில் முறைசாரா துறையிலுள்ள ஊழியர்களுக்காக அத்தகைய சமூக பாதுகாப்பு முறையொன்று நடைமுறையில் இல்லாமையால், அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் விரிவான சமூக பாதுகாப்பு வலையமைப்பொன்று நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் சிறுநீரக நோயாளிகளுக்காக வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல்,— வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறுநீரக நோய் பாரியளவில் அதிகரித்துள்ளமையால், சிறுநீரக நோயாளர்களுக்காக வடமேல் மாகாணத்தில் வைத்தியசாலையொன்றை நிர்மாணிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் தலசீமியா நோயாளர்களுக்கென வைத்தியசாலையொன்றைத் தாபித்தல்,— அண்மைக் காலத்தில் இலங்கையில் அதிக எண்ணிக்கையான தலசீமியா நோயாளர்கள் அறிக்கையிடப்பட்டிருப்பது குருநாகல் மாவட்டத்திலாகும் என்பதுடன் இதுவரை மேற்படி நோயாளிகளுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கான தனியான வைத்தியசாலையொன்றை தாபிக்கப்படாமையினால் மேற்படி நோயாளிகளுக்கு தனியான வைத்தியசாலையொன்றை குருநாகல் மாவட்டத்தில் தாபிக்க வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/ '19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் அதிக எண்ணிக்கையிலான விகாரைகள் காணப்படுவதும், அதிகப்படியான பிக்குமார் வசிப்பதும், கூடுதலான பௌத்தர்கள் வாழ்வதும் மற்றும் அதிகளவான சாசன பாதுகாப்பு அதிகார மன்றங்கள் நடைமுறையில் உள்ளதுமான வடமேல் மாகாணத்தில் வீழ்ச்சியடைந்து செல்லும் விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு துரித நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கிறது.

பா. 37/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகளையும் காணிகளையும் இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 38/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8,394 குடும்பங்கள் பாரிய நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/ '19

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— இணையத் தளங்களில் ஆபாச காணொளிகள் உலாவுவதை தடுக்கும் பொருட்டு சிறப்பு அலகொன்றைத் தாபித்தல்,— தற்போது அதிகளவில் இணையத் தளங்கள் ஊடாக பல்வேறு ஆபாச காணொளிக் காட்சிகள் உலாவுவதன் மூலம் ஆட்களின் அந்தரங்கத்துக்கு பாதிப்பேற்படுவதோடு குறிப்பாக பெண்கள் அதன் மூலம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதால், இவ்வாறான காணொளிக் காட்சிகளை தன் வசம் வைத்துள்ள, விநியோகிக்கின்ற மற்றும் உருவாக்குகின்ற ஆட்கள் தொடர்பாக புலனாய்வு செய்வதற்கு பயன்மிக்க சிறப்பு பிரிவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள் கீழ் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/ '19

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் சிறப்புப் பயிற்சி பெற்ற உளநல ஆலோகர்களை அல்லது போசகர்களை நியமித்தல்,— தற்போது பரவலாக காணக்கூடியதாக உள்ள இளைஞர் யுவதிகள், மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொள்ளும் போக்கினை தடுப்பதற்கு அனைத்து அரச கல்வி நிறுவனங்களுக்கும் பயிற்சி பெற்ற உளநல ஆலோசகர்கள், போசகர்கள் நியமிப்பட வேண்டுமென அல்லது மேற்படி கல்வி நிறுவனங்களில் தற்போது பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு உளநல ஆலோசனை தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல்,— 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் மொறட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ பீடமொன்றை நிர்மாணிக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு மேற்படி முன்மொழியப்பட்டுள்ள மருத்துவ பீடத்திற்கான போதனா வைத்தியாசாலையாக நாகொடை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இப்பாராளுன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— அறநெறிப் பாடசாலைக் கல்வியை கட்டாயப்படுத்தல்,— நாகரீகமான ஒரு சமூகத்துக்கு ஒவ்வாத வகையில் நாட்டினுள் பரவி வருகின்ற குற்றச் செயல்கள் மற்றும் சிறுவர் குற்றச்செயல்களை ஒழிப்பதற்கும் சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்குமாக சகல பிள்ளைகளுக்கும் 9 ஆம் தரம் வரை அவர்களது சமயங்களின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைக் கல்வியைக் கட்டாயப்படுத்தல் உகந்ததென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 47/ '19

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— கொலொன்னாவ மாநகரசபையை நிறுவுதல்,— கொழும்பு நகரத்தையும் அண்டிய நகரங்களையும் நிர்வகிப்பதற்காக கொழும்பு, கடுவெல மற்றும் கோட்டே எனும் மூன்று மாநகரசபைகள் நிலவியபோதிலும், இந்த மூன்று மாநகரசபை ஆளுகைப் பிரதேசங்களினதும் எல்லையில் அமைந்துள்ள கொலொன்னாவ தேர்தல் தொகுதி இரண்டு நிர்வாக அலகுகளான கொலொன்னாவ நகரசபை மற்றும் கொட்டிகாவத்த – முல்லேரியாவ பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வருவதால் ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இது காரணமாக அமைந்துள்ளதோடு சுற்றுப்புறத்தில் நிலவுகின்ற மாநகரசபைகள் நிர்வாகத்தின் வினைத்திறனின்பேரில் துரித அபிவிருத்தியை இன்றளவில் அடைந்துள்ளமையால், ஒட்டுமொத்த கொலொன்னாவ தேர்தல் தொகுதியினதும் அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு கொலொன்னாவ நகரசபையையும் கொட்டிகாவத்த – முல்லேரியா பிரதேச சபையையும் ஒருங்கிணைத்து கொலொன்னாவ மாநகரசபை நிறுவப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 49/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— வெற்றிலை செய்கையை மேம்படுத்தல்,— கம்பஹா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்ற அனேகமானவர்களின் வாழ்வாதாரமாகிய வெற்றிலை செய்கையானது நாட்டுக்கு அந்நியசெலாவனியை ஈட்டித் தருகின்ற விவசாயப் பயிர் என்பதோடு, இலங்கையிலிருந்து வெற்றிலையை கொள்வனவு செய்கின்ற பிரதான நாடொன்றாகிய பாகிஸ்தான் அண்மையில் அந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற வெற்றிலைக்கு விதித்துள்ள வரி காரணமாகவும், உள்நாட்டு பயிர்ச்செய்கைக்கு தாக்கம் ஏற்படுத்துகின்ற பல விடயங்கள் காரணமாகவும், உள்நாட்டில் வெற்றிலை விலை மிகவும் குறைந்துள்ள பின்னணியில் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிகளும் ஒழுங்கீனமாகியுள்ளதாலும் இத்தகைய நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள வெற்றிலை செய்கையாளர்களை மேம்படுத்தவும், தேவையான இறக்குமதி திசைகளை கண்டறிவதற்கும் அவசியமாகின்ற அரசாங்கத்தின் தலையீட்டை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதன் மூலமாக வெற்றிலை செய்கையை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 50/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்ட பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவித்தல்,— நாட்டில் இயங்கும் வர்த்தக வங்கிகளினால் நாட்டின் பிரசைகளுக்கு பல்வேறு தேவைகளுக்காக கடன் வழங்கும் போது ஆதனப் பிணைகளும் தனிநபர் பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படுவதுடன் இவ்விடயத்தில் பிணையாளி கடன்பெறுனருக்கு உதவியாக அதைச் செய்தாலும் ஏதேனும் காரணத்தால் அவ்வாறான கடனாளிகள் கடனை மீளச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடனாளி உள்ளிட்ட பிணையாளிகளின் பெயர்களும் கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்படுவதால் பிணையாளிக்கு பாரிய அநீதி ஏற்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் சார்ந்த பிரச்சினை தீர்க்கப்படும் வரை பிணையாளிக்கு வங்கிக் கடனொன்றை பெற்றுக்கொள்ள இயலாத நிலையொன்று ஏற்படுவது மாத்திரமின்றி புதிய தொழில்முயற்சியாளர்கள் உருவாகுவதற்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் பாதகமான முறையில் தாக்கம் ஏற்படுவதால் பிணையாளிகள் சார்பாக நெகிழ்ச்சிமிக்கதொரு கொள்கையினை பின்பற்றி கடன் தகவல் பணியகத்தினால் கறை நிரல் பட்டியலில் இடப்பட்டுள்ள பிணையாளிகளை அப்பட்டியலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் உயர்கல்வி நிறுவனங்களை உயர் தரத்துடன் பேணிச் செல்லும் நோக்கில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்களை அறிமுகப்படுத்தல்,— இலங்கையில் பல தனியார் உயர்கல்வி நிறுவனங்கள் தாபிக்கப்படும் போக்கு காணப்படுவதோடு முறையான கல்வியானது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உதவியளிப்பதனால் தனியார் கல்வி நிறுவனங்களின் உருவாக்கமானது பல துறைகளில் நாட்டிற்கு சாதகமாக அமைகின்ற போதிலும் குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து பெற்றுத்தரப்படுகின்ற சேவைக்குரிய தரம் பேணப்படுகின்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்துடன்கூடியதாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுப்பது மிகவும் முக்கியம் என்பதனால் அனுபவம் வாய்ந்த புத்தி ஜீவிகளினதும் கல்வியியலாளர்களினதும் தலையீட்டின் கீழ் உரிய பாடநெறிகளுக்கான உள்ளடக்கத்தினை ஆராய்ந்து தனியார் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சேவையினை உயர் தரத்துடன் பேணிச்செல்வதற்காக தற்போது காணப்படுகின்ற சட்ட முறைமையானது பலம் பொருந்தியதாக அமையவில்லை என்பதால் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தினை துரிதமாகத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தனியார் நிதி நிறுவனங்களைப் பேணிச் செல்வதற்கு ஏற்புடைய சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக பண வைப்பாளர்களைப் பாதுகாத்தல்,— தனியார் நிதி நிறுவனங்களில் பணத்தை வைப்புச் செய்யும்போது பண வைப்பாளர்களின் பாதுகாப்பு தொடர்பான சிக்கல்கள் தோன்றுவதாலும், பண வைப்பாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் நிதிக் கம்பனிகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் போதிய சட்ட ஏற்பாடுகள் இன்மையாலும், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தில் திருத்தங்களையும், வலுவிழந்த சட்டத்தைப் பலப்படுத்தும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு, அதற்கு உதவியாக 2009 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 19 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) ஆகிய சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதன் ஊடாக நாட்டினுள் பலம் வாய்ந்த நிதிப் பிரிவொன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.53 / '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உரிய தரத்தைக் கொண்ட சிறு ஏற்றுமதி பயிர்களை உற்பத்தி செய்தல்,— சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி உரிய தரமின்றி மேற்கொள்ளப்படுவதால் பயிர்செய்கையாளர்களுக்கும் நாட்டுக்கும் பாதகமான தாக்கம் ஏற்படுவதோடு, அரச வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்கு ஏற்றுமதிகளை அதிகரிப்பது உந்துசக்தியாக உள்ள போதிலும் இலங்கையின் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு சர்வதேசத்தில் காணப்பட்ட நற்பெயர், கொறக்கா புளிக்கு யூரியா கலத்தல் போன்ற மோசடியான செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களுக்கு நிலவிய சர்வதேச கேள்வி குறைந்துள்ளதால் உள்நாட்டு விலையும் குறைந்துள்ள பின்னணியில் இந் நிலைமையினை உடனடியாக மாற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற சிறு ஏற்றுமதி பயிர்களின் தரத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— தொழில் முயற்சி வங்கி முறையை அறிமுகம் செய்தல் மற்றும் தாபித்தல்,— நாடு பூராகவும் அமைந்துள்ள வணிக வங்கிகளினால் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கப்படும் நிதி அனுசரணை போதியதாக அமையாமையால், உலகில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் புழக்கத்தில் உள்ள தொழில்முயற்சி வங்கி முறைமையை இலங்கையில் பிரபல்யப்படுத்துவதன் மூலம் புதிய தொழில்முயற்சியாளர்களின் உருவாக்கத்தில் அதிகரிப்பை ஏற்படுத்த முடியும் என்பதுடன், புதிய கருத்துக்களுடன் வங்கிக்கு வருகை தரும் இளைய தொழில்முயற்சியாளர்களது தேவைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு நிதி வசதியை மாத்திரமன்றி வர்த்தக அறிவையும் தொடர்ச்சியான பாதுகாப்பையும் வழங்குதல் இந்த வங்கி முறைமையிலுள்ள விசேட அம்சமாக காணப்படுவதனாலும், இதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளுடன் தேசிய உற்பத்தியும் அதிகரிப்பதனால் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவியாக அமைவதனாலும் தொழில்முயற்சி வங்கி முறையை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/ '19

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— ஆயுர்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை கண்காணித்தல்,— நாட்டில் பல இடங்களில் ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் இடங்கள் அதிகளவில் திறக்கப்படும் போக்கு காணப்படுவதுடன் தொழில்முயற்சியாளர்கள் உருவாகுதல் நாட்டிற்கு நன்மைபயப்பதாக காணப்பட்ட போதிலும், இதனால் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதால், அநேகமான ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களில் இடம்பெறுகின்ற முறைகேடுகளைத் தடுப்பதற்கும் இதன் மூலம் சமூக ரீதியான நன்மைகளுடன் சிறந்த சூழலை உருவாக்குவதற்கும் அதிகாரமுள்ள நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஊடாக ஆயுள்வேத முறையில் உடலைப்பிடித்துவிடும் நிலையங்களை தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட இனப் பிரிவினர் எதிர்கால சனத்தொகை மதிப்பீட்டின் போது "மலையக தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தல்.— இந்தியாவிலிருந்து இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ள இந்தியர்கள் "இந்திய தமிழ்" தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதுடன் இன்று இவர்கள் "மலையக தமிழ்" என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இலங்கை பிரசாவுரிமையை பூரணமாக அனுபவித்து வருகின்ற போதிலும் "இந்திய தமிழ்" என்று அவர்களை அடையாளப்படுத்துவதன் மூலம் அவர்களின் இலங்கைப் பிரசாவுரிமை கேள்விக்கு இடமாகின்ற நிலை காணப்படுவதனால், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சனத்தொகை மதிப்பீடுகளின் போது இந்த இனப் பிரிவினரை "மலையக தமிழ்" எனும் தலைப்பின் கீழ் சனத்தொகை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வேண்டும் என்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 57/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்றினைத் தாபித்தல்,— தேசிய நல்லிணக்கத்தையும் மற்றும் இனங்களுக்கிடையே பரஸ்பர புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் மேலும் பயனுறுதியான விதத்தில் கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகளுக்கு அடியெடுத்து வைக்கும் நோக்கத்துடன், இலங்கையில் சகல தமிழ் மொழிமூல பாடசாலைகளிலும் சிங்கள மொழியில் கற்பிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— இலங்கையில் தற்போது மிக வேகமாகப் பரவிவரும் ஆக்கிரமிப்பு தாவர வகைகளின் பரவுதலை இல்லாதொழிப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையில் தற்போது ஆக்கிரமிப்பு தாவர வகைகள் பல பரவி வருவதோடு ஒருசில அமைப்புக்கள் மற்றும் நபர்களால் நாட்டில் பாதைகளின் இருமருங்கிலும், மயான பூமிகளிலும் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஆகிய பொது இடங்களிலும் நாட்டப்பட்ட அக்கேஷியா போன்ற மரங்களினால் தேன் கூட்டங்களின் இருப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் தாவர இனங்களைப் போன்றே உயிரினங்களினதும் வாழ்விற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இவ்வாறான ஆக்கிரமிப்பு தாவர வகைகளினது பரவலை தடுத்து முழுமையாக ஒழிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/ '19

கௌரவ மயில்வாகனம் திலகராஜா,— பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறுதோட்ட உரிமையாளர்களாக நியமித்து தொழிலாளர்களுக்கு தோட்டங்களின் உரிமையைப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்,— இலங்கையின் பெருந்தோட்டக் கைத்தொழில் துறைக்கு நீண்டகால வரலாறு காணப்படுவதுடன், கடந்த 25 வருட காலப்பகுதியினுள் ஒயில் பாம் உட்பட புதிய பயிர்ச்செய்கைகள் பெருந்தோட்டத்துறையில் நுழைந்து இருப்பதுடன் தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்டத்துறையின் திறனற்ற முகாமைத்துவம் காரணமாக இத்துறையானது வீழ்ச்சிக்கு உள்ளாகி தொழிலாளர்களுக்கு கூட நம்பிக்கையுடன் தமது தொழில்களில் ஈடுபடுவதற்கான பொருளாதார சமூகச்சூழலொன்று அங்கு காணப்படாமையினால், எமது நாட்டிலே பிரதான ஏற்றுமதி வருமானத்துறையாகிய பெருந்தோட்டக் கைத்தொழில் துறையை, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள தனியார் மயப்படுத்துகையில் இருந்து அகற்றி அரச தலையீட்டின் கீழ் புதிய முறைமையொன்றின் மூலமாக நிர்வகிப்பதற்காக சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்து தொழிலாளர்களுக்கு சிறு தோட்டங்களைப் பகிர்ந்தளித்து அவற்றை நிலைபேறாக நடாத்திச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— திரைப்படக் கல்லூரியொன்றைத் தாபித்தல்,— இலங்கையின் திரைப்படக் கைத்தொழிலானது தற்போது 70 ஆண்டுகளைக் கடந்திருப்பதோடு சர்வதேச திரைப்பட விழாக்களை வெற்றிபெறக்கூடிய திறமைமிக்க திரைப்படப் பணிப்பாளர்கள், நடிகர், நடிகைகள் உட்பட படைப்பாளிகளை உருவாக்க இலங்கைக்கு முடிந்துள்ள போதிலும், அது ஒரு பாடமாக எதிர்கால சந்ததியினருக்கு முறைப்படி எடுத்துச்செல்ல எமது நாட்டுக்கு இதுவரை திரைப்படக் கல்லூரியொன்று இல்லாமையினால் தொழில்சார் திரைப்படத் துறையொன்றை உருவாக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் திரைப்படக் கல்லூரியொன்று துரிதமாக தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நவீன கலையரங்கமொன்றை தாபித்தல்,— இலங்கையில் Modern Art எனும் நவீன கலைத்துறையில் ஈடுபடுகின்ற கலைஞர்கள் எமது நாட்டில் இருப்பினும் அவர்களின் கலைப்படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு நவீன கலையரங்கமொன்று இல்லாதுள்ளமை பாரிய குறைபாடாக உள்ளதுடன் அவ்வாறான கலையரங்கமொன்றின் மூலம் எமது சித்திர மற்றும் சிற்பக்கலை உள்ளிட்ட கலைப்பணி களுக்கு ஊட்டமளிக்கப்படுவதுடன், சுற்றுலாக் கைத்தொழிலின் முன்னேற்றமும் இடம்பெறுவதால் அவ்வாறான கலையரங்கமொன்றை (Modern Art Gallery) கொழும்பு நகரைச் சார்ந்ததாகத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.65/ '19

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களை முறையாக வெளியேற்றுதல்,— இலத்திரனியல் கழிவுப் பொருட்களாக அறியப்படுகின்ற ஈ-கழிவுப் பொருட்கள் எமது நாட்டுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தி வருவதோடு, இன்றளவில் வருடமொன்றுக்கு சுமார் 92,000 மெற்றிக் தொன் ஈ-கழிவுப் பொருட்கள் பிறப்பிக்கப்படுவதால் 2020 ஆம் ஆண்டளவில் அது 120,000 மெற்றிக் தொன் வரை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதோடு இலத்திரனியல் கழிவு பொருட்கள், அவற்றை வெளியேற்றுதல் மற்றும் அதில் காணப்படும் சுற்றாடல் மற்றும் சுகாதார ரீதியான தீங்குகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கும், இலத்திரனியல் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக முறைசார்ந்ததும் தொடர்ச்சியானதுமான வழிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/ '19

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— சர்ச்சைக்குரிய "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தை அரசாங்கத்துக்குச் சுவீகரித்து "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயர் மாற்றம் செய்தல்,— நாட்டில் பெரும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ள ஹிரா மன்றத்தினால் தொடங்கப்பட்ட "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனம் மற்றும் அந் நிறுவனத்தின் மூலம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இன்றளவில் உயர் கல்வி அமைச்சில் பதிவு செய்வதற்கு அங்கீகாரத்தை பெறும் நோக்கத்துடன் வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் உயர்கல்வி நிறுவனம் சமூகத்தில் கடும் விமர்சனத்தை எதிர்கொண்டுள்ளதோடு இதற்கு காணி வழங்கப்பட்டுள்ள மற்றும் நிதி உதவிகள் கிடைத்துள்ள செயன்முறை உள்ளிட்ட சில செயன்முறைகள் தொடர்பாக எழுந்துள்ள விடயங்களை கருத்தில் கொண்டு ஷரியா பல்கலைக்கழகமாகவும் அறியப்பட்டுள்ள "பெற்றிக்கலோ கெம்பஸ் பிரைவேட் லிமிற்றட்" நிறுவனத்தையும் அதனுடன் தொடர்புடைய சகல கட்டடங்களையும் அரசாங்கத்துக்கு சுவீகரித்து அரச பல்கலைக்கழகமாக மாற்றி அதற்கு "மட்டக்களப்பு பல்கலைக்கழகம்" என பெயரிடப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.67/ '19

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பயங்கரவாதிகளுடனும் பயங்கரவாத அமைப்புக்களுடனும் தொடர்புபட்டவர்களுக்கு மரண தண்டனையை வழங்குதல் மற்றும் அவர்களின் மொத்த சொத்துக்களையும் பறிமுதல்செய்தல்,— சர்வதேச அல்லது உள்நாட்டு பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டவர்கள், அத்துடன் பயங்கரவாத அமைப்புகள், செயற்பாட்டாளர்களுடன் நேரடி அல்லது மறைமுகமாக உதவிபுரிகின்ற, துணைபுரிகின்ற, உடந்தையாயிருக்கின்ற ஆட்களின் செயற்பாடுகள் பற்றி நீதிமன்றத்தால் நிரூபிக்கப்பட்டவிடத்து, அவர்களின் சொத்துக்கள் அனைத்தையும் பறிமுதல்செய்து மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சகல மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ளல்,— தற்போது முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்ற நாட்டிலுள்ள மத்ரஸா பாடசாலைகள் மற்றும் அரபுக் கல்லூரிகள் அனைத்தையும் உடனடியாக கல்வி அமைச்சின் கீழ் பொறுப்பேற்றுக் கொண்டு இந்தப் பாடசாலைகளில் ஒரு பாடமாக சிங்கள வரலாற்றைக் கற்பிப்பதற்கும், அப்பாடசாலைகளை கல்வி அமைச்சின் கீழ் கண்காணிப்புச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/'19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் மதங்களுக்கமைய மற்றும் இனங்களுக்கமைய வகைப்படுத்தாது கலவன் பாடசாலைகளாக மாற்றியமைத்தல்,— இலங்கையில் காணப்படுகின்ற அனைத்துப் பாடசாலைகளையும் எதிர்வரும் ஆண்டு முதல் படிப்படியாக கலவன் பாடசாலைகளாக மாற்றுவதற்கும் சிங்களம், தமிழ், முஸ்லிம், கத்தோலிக்கம் என்றவாறு பாடசாலைகளைத் தாபிக்க எதிர்காலத்தில் வாய்ப்பளிக்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு இன அடிப்படையில் குறிப்பிட்ட சதவீதத்தின் கீழ் பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/ '19

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்தல்,— தற்போது எழுந்துள்ள நிலைமையினை கவனத்திற் கொண்டு இலங்கையில் இனம் மற்றும் சமய அடிப்படையில் அரசியல் கட்சிகளைப் பெயரிடுவதனைத் தடை செய்து தற்போது அவ்வாறு இனத்தினதோ அல்லது சமயத்தினதோ பெயரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசியல் கட்சிகளினது பெயர்களையும் மாற்றம் செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/'19

கௌரவ திலங்க சுமதிபால,— "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை அரசாங்கம் சுவீகரித்து அரச பாதுகாப்பு பலக்லைக்கழகமாக மாற்றுதல்,— உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் இலங்கையின் தேசிய பாதுகாப்பு சம்பந்தமாக தோன்றியுள்ள பாரதூரமான நிலைமையின் கீழ் குறிப்பாக பெரும்பான்மை சமுதாயத்தினரின் பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கையை உறுதிசெய்வதற்காகவும், இலங்கைக்கு எதிர்காலத்தில் அத்தகைய சந்தர்ப்பமொன்று ஏற்படாதிருக்கவும், குறிப்பாக தீவிரவாத கருத்துடையவர்களிடமிருந்து வடக்கு கிழக்கு பிரதேசங்களைப் போன்றே ஒட்டுமொத்த இலங்கையையும் பாதுகாத்துக்கொள்ளவும், "பெட்டிக்கலோ கெம்பஸ் பிரைவேற் லிமிற்றெட்" நிறுவனத்தை பாதுகாப்பு அமைச்சு சுவீகரித்து அரச பாதுகாப்பு பல்கலைக்கழகமொன்றாக மாற்றவேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/'19

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத்திட்டத்தில் உள்ளடக்கி அபிவிருத்தி செய்தல்,— இலங்கையின் பழைமைவாய்ந்த இராசதானியொன்றாகக் கருதப்படுகின்ற பண்டுவஸ்னுவர இராசதானியை சுற்றுலாத் திட்டத்தினுள் உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.73/'19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரஜைகளின் சுகாதார உரிமையை அரசியலமைப்பில் உள்ளடக்குதல்,— இலங்கையில் சகல பிரஜைகளுக்கும் தாம் பீடிக்கப்படும் நோய் அல்லது முகம் கொடுக்க வேண்டி நேருகின்ற விபத்தின்போது அரசாங்கச் செலவில் இலவசமாக சிகிச்சை பெறுவதற்கான உரிமையினையும், தொற்றுகின்ற அல்லது தொற்றாத நோய்களைத் தவிர்பதற்குத் தேவையான தடுப்பு மற்றும் ஆலோசனைகளைப் போன்றே புனர்வாழ்வளிப்பு சேவைகளை தரமானதாகவும் நியாயமானதாகவும் பெற்றுக்கொள்வதற்கான உரிமையினையும் ஏற்றுக்கொண்டு, இது இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்வாங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.74/ '19

கௌரவ ரொஷான் ரணசிங்க,— இலங்கைப் பிரஜைகளுக்கு திருமணம் பற்றிய பொதுச் சட்ட விதிகளை உருவாக்குதல்,— இலங்கை வாழும் பல்லின சமூகங்களை பிரிக்கும் வகையிலான சட்டங்கள் நாட்டில் அமுலில் இருப்பதால் அவற்றை சீர் செய்யுமுகமாக குறிப்பாக திருமணச் சட்டம் சகல பிரஜைகளுக்கும் பொதுவான சட்டமாக இருக்க வேண்டுமெனவும், கண்டி திருமணச் சட்டம், முஸ்லிம் திருமணச் சட்டம் என வித்தியாசப்படக் கூடாதெனவும், பிரஜை ஒருவர் ஒரு திருமணத்தை மாத்திரமே செய்துகொள்ள முடியுமெனவும் அதனை 18 வயது பூர்த்தியானதன் பின்னர் செய்துகொள்ள முடியுமென்றவாறு இலங்கை பிரஜைகளுக்கு திருமணம் பற்றி பொதுவான சட்டவிதிகளை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.